# தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

**8வது கீழ் தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.**

**இணையதளம்: www.forests.tn.gov.in தொலைபேசி எண்: 044 - 2434 1251**

**(விளம்பர எண். 1 / 2018, நாள்: 06.10.2018, அறிவிக்கை எண். 2)**

## வனக்காப்பாளர் மற்றும் ஒட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிக்களுக்கான கேள்வி மற்றும் விடை சவால்

தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் 08.12.2018ம் தேதியன்று வனக்காப்பாளர் மற்றும் ஒட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிக்களுக்கான கேள்வி - விடை சவாலுக்கான வழிமுறைகளை வெளியிட்டது. அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இணைய சேவையை பயன்படுத்துவதால் ஏற்படும் நெரிசலை தவிர்க்கவும் கேள்வி-விடை சவாலுக்கு விண்ணப்பதாரர்களின் சீரான அனுபவத்திற்காகவும் பின்வரும் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுவதென குழுமத்தால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வழிமுறைகள் கீழ்கண்டவாறு விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

1. வனக்காப்பாளர் மற்றும் ஒட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிக்களுக்கான இணையவழித் தேர்வுகள் 10.12.2018 முதல் 11.12.2018 வரை நடைபெற்றது.

2. இணையவழித் தேர்வெழுதிய விண்ணப்பதாரர்கள் www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து, வினாவாரியாக விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட பதில்களையும் கேள்விக்கான சரியான பதில்களையும் காணலாம். விண்ணப்பதாரர்கள் ஏதேனும் தவறைக் கண்டறியும்பட்சத்தில் www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து முறையிடலாம். இச்சேவையானது 24 மணி நேரம், அதாவது காலை 9 மணி முதல் அடுத்த நாள் காலை 9 மணி வரை கீழ்கண்ட அட்டவணைப்படி இருக்கும்.

| தேர்வு எழுதிய நாள் | காலை 9 மணி முதல் பார்ப்பது / சவால் செய்வது | காலை 9 மணி வரை பார்ப்பது / சவால் செய்வது |
|---|---|---|
| 10.12.2018 | 19.12.2018 | 20.12.2018 |
| 11.12.2018 | 20.12.2018 | 21.12.2018 |

3. விடை சவாலை இணையவழி மூலம் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

4. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு விடைக்கான சவாலுக்கும் இணையவழி கட்டண நுழைவாயில் (online payment gateway) மூலம் ரூ.500/- (+ அனுமதிக்கப்பட்ட சேவை வரி) செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

5. விண்ணப்பதாரர்களின் விடை சவால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், மேலே குறிப்பிடப்பட்ட விடை ஒன்றுக்கான ரூ.500/- இணையவழி முறையில் (online mode) திரும்ப செலுத்தப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் முறையிடும் அனைத்து ஆட்சேபனைகள் / சவால்களை கருத்திற்கொண்டு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் (TNFUSRC) இறுதி விடைகளை வெளியிடும் மற்றும் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் 2018 தேர்விற்கான இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

7. தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் இறுதி விடைகள் அறிவிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு சவால்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் (விடைச்சவாலின்படி) தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் "மூல மதிப்பெண்களாக" கருதப்படும். தகவல் சிற்றேடு பத்தி 17 (A) ன்படி நியாயமான மற்றும் கட்டாயமான இயல்பாக்கல் நடைமுறையினால் மதிப்பெண்கள் அதிகரிக்கலாம் / குறையலாம் / மாறாமல் இருக்கலாம்.

9. இயல்பாக்கல் நடைமுறைக்குப் பின் விண்ணப்பதாரர்களால் பெறும் மதிப்பெண் **"இறுதி மதிப்பெண்"** ஆகும்

10. இது தொடர்பாக தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் முடிவே இறுதியானதாகும்.

11. **எச்சரிக்கை:** விண்ணப்பதாரர்கள் பதில்தாள்களை அச்சு எடுக்கவோ பிரதி உண்டாக்கவோ கூடாது என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பதில்தாளானது தமிழ்நாடு வனத்துறையின் அறிவுசார் சொத்துடைமை ஆகும். இதனை எவரேனும் மீறும்போது தீவிரமாக பார்க்கப்பட்டு இந்த குற்றத்திற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

**குறிப்பு**: விண்ணப்பதாரர்கள் www.forests.tn.gov.in இணையதளத்தில் உள்ள "**கேள்வி மற்றும் விடை சவால் - எதிர்ப்பார்க்கப்படும் கேள்விகள்**" அறிவிப்பை கவனமாக படிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேதி: 12.12.2018

உறுப்பினர் செயலர், தநாவசீபதேகு